திரு. ஆர். பரந்தாமன்: அரசு ஊழியர்கள் வாங்குகிற சம்பளத்தின் அடிப்படையில் இவர்களுடைய சம்பளமும் அமைய வேண்டும் என்று அவர்களுடைய கூட்டத்தில் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்களே, அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார். இந்த வங்கியானது ஒரு நிறுவனம். அதன் ஊழியர்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகள், அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அந்த வங்கிக்கு உள்ளதாகும். அதில் தீர்க்கப்படாதது ஏதாவது இருக்குமானால் அது நம் லேபர் மினிஸடர் அவர்களுக்கு வந்து சேரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படக் கூடிய அளவிற்கு இங்கு சென்னையில் ப்ராஞ்சுகளில் உள்ள ஊழியர்களுக்கும் கொடுக்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது நான் சொன்னதெல்லாம் சென்னையில் உள்ள ஸ்டேட் லாண்ட் டெவலப்மென்ட் பாங்க் பற்றியது. யூனியன் ஒன்று இருக்கிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதாவது இருக்குமானால், அவை தீர்க்கப்படாமல் இருக்குமானால் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு அவர்களிடம் வந்து சேரும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த நில வள வங்கி ஊழியர்களுக்கும் ஒன்று போல் ஊதியத்தைக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒரு வேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அரசாங்க ஊழியர்கள், பெறுகிற ஊதியத்தை விட, அந்த ஊழியர்கள் அங்கே வங்கியில் பணியாற்றினால், அந்த ஊழியர்களுக்கு ஒரு மாத சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவரவர்களே, மாநில நில வள வங்கியின் கிளையில் 3 ஆண்டுகளாகப் பணியாற்றியும் லீகல் அசிஸ்டென்ட்ஸ் என்ற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கின்றனர். அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? அது பற்றி பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.